ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

लब्ध्वा सुदुर्लभतरं नरजन्म जन्तुस्तत्रापि पौरुषमतस्सदसद्विवेकः।
संप्राप्य चैहिकसुखाभिरतो यदिस्यात् धिक्तस्यजन्मकुमतेःपुरुषाधमस्य॥

பிராணியானது மிகவும் துர்லபமான பிறவியையடைந்து அதிலும் பௌருஷத்தையும்பெற்று அத்துடன்கூட இது நல்லது. இது கெட்டது. என்று பகுத்தறியக்கூடிய அறிவையும் வகித்து, இவ்வுலகிலுள்ள சிற்றின்பசுகத்தை அடைய முயற்சிக்குமாயின் புருஷர்களுக்குள் கீழ்ப்பட்டவராயும் கெட்ட புத்தியுடையவராயுமிருக்குமவர் நிந்திக்கத்தகுந்தவர்.

பல்லாயிரம் ஜன்மாக்களில் செய்யப்பட்ட சிறந்த புண்ணியங்களால் இப்புவியில் மானிடராக ஜனித்து எவ்வித கார்யங்களையும் இலகுவாய் நடத்தி, சீக்கிரம் அதின் பயனை அடைவதற்குச் சாதனமான, பௌருஷமென்னும் சக்தியையும் பெற்று, இதற்குமேலும், இது நம்முடைய சுகத்திற்கு இன்றியமையாத ஸாதனம். இது நமக்கு துக்கத்தை உண்டுபண்ணக் கூடியது. என்று நன்குபகுத்தறியும் புத்தி சக்தியையும் அடைந்த நம்போன்றவர்கள் இதிலிருந்தும் மேலான பதவியையடைய யத்தனிக்காமல் பசு பக்ஷிகளைப்போல இவ்வுலகிலுள்ள விஷயங்களில் விருப்பமுள்ளவர்களாய்க் கொண்டு, சிறந்த இந்த ஜன்மாவை வீண்பண்ணுவோமாகில் நாம் புத்தியில்லாதவர்களென்று சொல்லவும் வேண்டுமா ?

சிராத்தம்.

மேலும், நம் குலத்தில் மரித்தவர்களுக்காக வேறு குலத்தில் பிறந்த பிராமணர்களை வரவேற்றி அவர்களுக்கல்லவோ தேய்த்துக்குளிக்க எண்ணெயும், நல்ல வஸ்திரங்களும், தக்ஷிணையுடன் சிறந்தசாப்பாடும் கொடுக்கப்படுகின்றன. இவ்விதம் எதற்காகச் செய்யவேண்டும்? இறந்த நம் பிதுர்க்களுக்கு நம்மால் நேரில் கொடுக்க முடியாதாகையால் இவர்கள் மூலமாக மேற்கூறிய சாதனங்களைக் கொடுக்கவேண்டுமென்றால் அவர்களாவது 'நாங்கள் உங்கள் குலத்தில் மரித்தவர்களுக்கு நீங்கள் கொடுத்த சாமான்களைக் கொடுத்துவிட்டோம்' என்று உறுதியாய்ச் சொல்லுகிறார்களோவென்றால் இல்லை, அவர்களைக்கேட்டால், 'நாங்கள் யாதொருவரையுமறியோம். ஆனால் இப்பொழுது நல்ல உணவு, வஸ்திரம் முதலானவைகள் கிடைக்கின்றன என்று கூறுவார்கள். இவர்கள் கொடுக்காவிட்டாலும் இவர்களைப் பூஜித்தமாத்திரத்தில் நம் பிதுர்க்களுக்குப் பசி தாகம் முதலியவைகள்விலகி நல்லதிருப்தியை யடைகிறார்களென்றால் நம் குடும்பத்தில் யாரையாவது காசி முதலான இடங்களுக்கு அனுப்பி அவர்கள் புறப்படும்பொழுது 'நீங்கள் யாதொரு ஸாதனமும் கொண்டுபோகவேண்டாம் நான் தங்களையுத்தேசித்து இவ்விடத்தில் சுரோத்திரியங்களான ப்ராம்மணர்களுக்குச் சாப்பாடு முதலியவைகளை நன்றாய்ச் செய்கிறேன். அதனால் தங்களுக்கு பசி தாகம் முதலானவைகள் இல்லாமலிருக்கும்' என்று சொல்லலாம். அவ்விதம் செய்தாலும் அவர்களுக்குப் பசி நிவர்த்தியாகக் காணோம். அது மிகவும் தூரதேச

மாகையால் அவ்விதம் சொல்லக்கூடாதென்றால் நமது கிரகத்திலேயே மாடியில் தந்தை முதலியவர்களை வைத்துக் கீழே ப்ராம்மணர்களுக்குச் சாப்பாடு முதலியவைகளைச் செய்து வைத்தாலும் திருப்திப்படக்காணோம். புசிக்கும் பிராமணர்களின் அருகில் உட்காரவைத்து அவர்களுக்குப்போஜனாதிகளைச் செய்துவைத்தாலும் இறந்த நம்மவர்களில் யாராகிலும் ஒருவர் ஜீவித்திருக்கமாட்டாரா? இவ்வித ஸந்தேஹங்களை அவரவது 'முன் ஜன்மாவிலுள்ள என் புத்திரன் எனக்காக இன்றைய தினம் சிராத்தம் செய்கிறான். அஃது இப்பொழுது என்னிடம் வந்திருக்கிறது' என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லி நிவர்த்தி செய்வதாகவும் காணோம். இவ்விதம் பலவிதமான ஸந்தேகங்கள் இருக்கிறபடியாலும், நமது பிதுருக்கள் தம் கர்மாவை அநுஸரித்து எவ்வித ஜன்மாவை அடைந்து எவ்விடத்திலிருக்கிறார்களோ அதுவும் நமக்குத் தெரியாதபடியாலும் இவர்கள் உத்தேசித்துச் செய்யும் இந்த சிராத்தத்தால் அற்பமேனும் அவர்களுக்கு உபயோகமில்லையென்று தெரிகிறது.

ஆனால், இதினால் புசிக்கும் ப்ராம்மணர்களுக்கு மாத்திரம் நல்ல சாப்பாடு முதலியவைகள் கிடைக்கின்றன. இதை கவனித்தால் 'நல்ல புத்தியும் பிழைக்க வேறுவழியுமில்லாதப் பிராமணர்கள் செய்த ஒரு கட்டுப்பாடே' என்று பௌத்தர்கள், அவர்கள் ஸ்மிருதியில்,

अग्निहोत्रं त्रयो वेदास्त्रिदण्डं भस्म पुण्ड्रकम् ।
बुद्धिपौरुषहीनानां जीविकेयं बृहस्पते ॥

என்கிற வசனத்தால் பரிகஸிப்பது உசிதமென்று தோன்றுகிறது" என்று சிலர் சந்தேஹப்படுகிறார்கள்.

சாஸ்திரத்தின் முகத்தைப் பார்க்காமல் கேவல யுக்தியை மாத்திரம் கொண்டு இவ்விதம் கூறுவது சரியல்ல. ஆரம்பத்தில் எம்மால் கூறப்பட்டதை மறக்கக்கூடாது. சிரார்த்தமென்பது அவசியம் செய்யவேண்டியது தான். அதில் ஹோமம் பிராம

ணபோஜனம் பிண்டதானம் இவைகள் முக்கியம். ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் 8-வது படலத்தில்,

होमं पिण्डदानं ब्राह्मणभोजनं त्रीण्यपि मासिश्राद्धे प्रधानानि ॥

என்று இவ்விதமே சொல்லப்பட்டிருக்கின்றது. வைதிகர்களான நம்மெல்லோருக்கும் சிராத்தம் முதலிய வைதீககாரியங்கள் செய்வதற்கு முதலில் சுருதி ஸ்மிருதி நிபந்தன கிரந்தங்களால் நன்குதெரிந்துகொண்டு, பிறகு அதற்கு யுக்தியிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். முதலில் யுக்தியால் ஓர் அர்த்தத்தைத் தீர்மானம் செய்துகொண்டு அதற்கு சுருதி முதலியவைகளில் ஆதாரமிருக்கிறதாவென்று பார்க்கக்கூடாதென்று பூர்வமீமாம்ஸையில் அவிரோதாதிகரணத்தில்,

विरोधे ह्यनपेक्षं स्यादसति ह्यनुमानम् ॥

என்றும், பிரம்ம மீமாம்ஸையிலும் ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறார்கள்.

मृताहं समतिक्रम्य चण्डालः कोटिजन्मसु ।
मृताहं समतिक्रम्य नरः पतनमृच्छति ॥
जीवतोर्वाक्यकरणात् प्रत्यब्दं भूरिभोजनात् ।
गयायां पिण्डदानाच्च त्रिभिः पुत्रस्य पुत्रता ॥
एष्टव्याबहवः पुत्रा यद्येकोऽपि गयां व्रजेत् ।

இவ்விதம் ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களால் சிராத்தம் அவசியம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது.

அப்படிச் செய்கிறதாயிருந்தால், 'எவ்வளவு பேர்களுக்குச் செய்கிறது? இறந்த எல்லா ஜனங்களுக்கும் செய்கிறதென்றால் முடியாதே' என்று தோன்றும் சங்கைக்கு சமாதானம். இந்த சரீரம் உண்டாகும் காலத்தில் மாதாபிதா ஸம்பந்தத்தாலுண்டாகிறது. அச்சமயத்தில் மாதாவினுடைய சரீரத்தி

விருந்தும் துவக்கு அஸ்ருக்கு மாம்ஸம்என்கிற இம்மூன்றையும் எடுத்துக்கொண்டு தன் கர்மவசத்தாலுண்டாகிறான் இதற்குப் பிரமாணம் கர்ப்போப நிஷத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

सापिण्डयं सप्तपूरुषम् ।

என்று வைத்யனாததீக்ஷிதரும் சொல்லியிருக்கிறார். அதாவது, பிதா, பிதாமஹர், பிரபிதாமஹர், புத்திரன், பௌத்திரன், பிரபௌத்திரன் பண்ணுகிறவர் ஒருவர் ஆக ஏழு பெயர்கள். ஒருவனுக்கு பிதாவாவது, மாதாவாவது மரித்தால் கிரமமாய் 10-நாள் வரையிலுள்ள கிரியைகளைச்செய்து, பிறகு ஏகோத்திஷ்டம் என்கிற 11-ம் நாள் செய்யவேண்டிய சிராத்தத்தைச் செய்தால், பிறகு பிசாசபாவத்திலிருந்தும் அவன் பிதா நிவிருத்தியடைகிறான். 12-ம் நாள் செய்யவேண்டிய ஸபிண்டீகரணம் என்னும் சிராத்தத்தை நடத்தி, பிண்டஸம்யோஜநம் செய்தால் பிறகுதான் பிரேதபாவம் போய் பிதுருபாவத்தை யடைகிறார். இக்கருத்தையே,

एकोद्दिष्टात् पिशाचत्वं पितृत्वं पिण्डयोगतः ॥

என்று ஸ்மிருதியிலும் கூறியிருக்கிறார்கள். இவர்கள் பிதுருக்களின் சம்பந்தத்தையடைந்தபிறகு முன் பிதுருஸ்தானத்திலிருப்பவர் பிதாமஹராயும், பிதாமஹராயிருப்பவர் பிரபிதாமஹராயும், ஆகிறார்கள். முன் பிரபிதாமஹராயிருப்பவரை பிதுருகோடியிலிருந்து விலக்கவேண்டியது இவ்விதம் கீழிருந்து சேருங்காலத்தில் மேலிருப்பவர்கள் விலகி[illegible] ஸபிண்டீகரணம் என்னும் கர்மாவில் [illegible]
பிதுருதேவதைகளுடன் சே[illegible]
ரர், ஆதித்தியர் என்கிற[illegible]
பிதுருதேவதைகள்[illegible]
சிராத்தங்கவி[illegible]
இவர்[illegible]
என்[illegible]

वसुरुद्रा दितिसुता भोक्तारः श्राद्धकर्मणि ।
प्रीणयन्ति मनुष्याणां पितॄन् श्राद्धेषु तर्पिताः
एवमेते महात्मानः श्राद्धे सत्कृत्य पूजिताः ।
सर्वान् कामान् प्रयच्छन्ति शतशोऽथ सहस्रशः ॥

என்கிற இந்த வசனங்களால் போதிக்கப்படுகின்றது. இதினால், இறந்த நம் பிதுர்க்களில் எத்தனைபேர்களுக்கு நாம் சிராத்தம் செய்கிறதென்கிற சங்கைக்கும் நாம் பிராமணர்களுக்குப் போடும் ஆகாரம் முதலியவைகள் அவர்களுக்கு எப்படிப் போகுமென்கிற சங்கைக்கும் விடையளிக்கப்பட்டது.

(இன்னும் வரும்)

ஜீவகாருண்யம்.

காரைச்சிவனடியார் திருக்கூட்டத்திலிருந்தும் லோகோபகாரத்தின்பொருட்டு வெளியிடப்பட்ட துண்டுப்பத்திரிகைகளில் சில எனக்குக் கிடைத்தன. அவைகளில் ஜீவகாருண்யம் முக்கியமென்பதைப் பற்றி விரிவாய் வரையப்பட்டிருக்கின்றது. சிலர் ஆடு, கோழி, பன்றி முதலான பிராணிகளை தேவதைகளுக்கு பலிகொடுத்து பூசைபோடுகிறோமென்று கபட
மான பக்தி... ப்படையாய்க் காட்டி, தங்கள் உணவிற்
...கிறார்கள். ஹிம்ஸை செய்யாம
...ல சாஸ்திரங்கள் முறையிடு
... பெரிதாய்க் கருதிப்
...ித்து நரகங்களில்
...கப்பத்திரிகை
...னால்
...க்

கடமையான ஒரு கர்மாவை அனுஷ்டிக்குங்கால் அதில் நேரும் ஹிம்ஸையையும் செய்யக்கூடாதென்றும், தப்பென்றுமுரைப்பது கற்றறிந்த கல்விமான்களுக்கழகில்லை. சாஸ்திரங்கள் க்ஷத்திரியர்களுக்கு யுத்தத்தை ஸ்வதர்மமாகக் கூறுகின்றதென்று அவைகளைப் பிரமாணமாகக் கொண்டு ஓரரசன் தர்மயுத்தம் செய்து பிராணிவதம் ஏற்பட்டால் அதினால் அவனுக்குப் பாபமுண்டென்று கூறமுடியுமா இதுபோலவே வேள்வி என்னும் கர்மாவும், அதை விதிவழுவாது அனுஷ்டிப்போர்களுக்கு மத்தியில் ஏற்படும் ஹிம்ஸையால் தோஷமுண்டென்று சொல்வதும் உசிதமல்ல. ஆகையால் சாஸ்திரங்களில் அவரவர்களுக்கு ஸ்வதர்மமாய் அவசியம் அனுஷ்டிக்கவேண்டுமென்று கூறப்பட்ட கர்மாக்களை விட்டுத் தம் ஆகாரத்திற்காகவோ உலகிலுள்ளோர்களின் புகழ்ச்சிக்காகவோ ஹிம்ஸை செய்தால் அதினால் அதிக பாபத்திற் குள்ளாகவேண்டு மாகையால் அவ்வித ஹிம்ஸை செய்யாமலிருக்கவேண்டி ஜனங்களுக்கு அறிவிக்கும்பொருட்டு இவைபோன்ற பத்திரிகைகள் அடிக்கடி பல வெளியில் சஞ்சரித்தால் அதிக ஹிம்ஸை ஏற்படாதென்பது திண்ணம்.

உபபத்திராதிபர்.

ஸ்ரீ ராமவிஜயம்.

(௭௯-வது பக்கத்...

இவளது மனம் எப்ப...
தோ அப்படியே அவ...
கிறது. இவளுக்கா...
ராஜ்யத்தை ...
நாய...
ஜீ...

லேயே சோபிக்கக்கூடிய பெருமையை கொஞ்சமாவது அவர் கொண்டிருப்பது விந்தையினும் விந்தையே. இவளைத் தேடித் தருவதற்கு த்ரைலோக்ய ராஜ்பத்தைக் கேட்காமல் சுக்ரீவன் கிட்கிந்தா ராஜ்யத்தைக்கேட்டது அறியாமையே. இந்த தேவியைத்தேடியே நான் சமுத்திரத்தை தாண்டிவந்தேன். இவளை விட்டுப்பிரிந்ததால் தபித்து மரமே! செடியே! கொடியே! என் சீதையைக்கண்டாயா? என்று ராமன் காமுகன்போல் புலம்புகின்றாரே யென்று இவளைப் பார்க்குமுன் நினைத்தேன். இப்பொழுது இவளைப் பார்த்தபின் அவர் அழுதது போதாதென்றும் இவளைப்பாராத துக்கத்தால் கோபித்து உலகங்களையே அவர் அழித்தாலும் நியாயமே யென்றும் இப்பொழுது நான் நினைக்கின்றேன். ஆ! என்ன அநியாயம்! இந்தப் பெண்கள் நாயகமோ இப்படி கஷ்டங்களுக்குள்ளாவது க்ஷணங்கூடத் தாமதியாமல் ஸ்ரீராமன் ஓடிவந்து இவளை அங்கீகரிக்கவேண்டும். இரண்டு பேரையும் சேர்த்துப் பார்த்தால்தான் நமது கண்கள் கண்களாகும் இவள் இந்தத்தரையில் உட்காருவதற்கோ தகுந்தவள். ரத்னசிம்மாஸனத்தில் இருந்து ஸகலலோகங்களையும் ஆளக்கூடிய லோகமாதாவாச்சுதே இவள். பூமிதேவிக்குப் பெண்ணாய்ப் பிறந்ததால் இராக்ஷதலோகத்தை நிர்மூலம் செய்யாமல் இவள் பொறுத்திருக்கிறாளென்று நினைக்கின்றேன் என்று பலவிதமும் யோஜித்தார். ஒற்றைக்கண்ணி, மூன்று மூக்கு, நான்கு தலைக்காரி, ஐந்து நாக்குக்கொண்டவள், ஆறு காலுள்ளவள், எருமை மூஞ்சிக்காரி வியாக்ரமுகி முதலியகோரமான ராட்க்ஷஸிகள் இவளைச் சுற்றிநின்று பயமுறுத்துவதைப் பார்... ...த்தார். இவ்வளவு கஷ்டநிஷ்டூரங்களையும் லட்
... இருக்கச்செய்வது இவளது பாதி
... தோஷித்தார் இராகவனை மன
... ர்ந்தார்.

... செவியில்
... பாட

அப்ஸரஸ்கள் ஆட ராவணன் நித்திரைவிட்டு எழுந்தான். கண்ணுடிக் கெதிர்நின்று சர்வாபரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டான். பரிவாரங்களுடன் சீதாதேவியினிடம் வந்து தன்னிடத்தில் பிரீதிபண்ணும்படியாக அவளைப் பிரார்த்தித்தான். சீதை நடுங்கினுள். பெருங்காற்றில் வாழைபோல் ஆட்டல்கொண்டாள். இவனுடைய வெட்கக்கேடான வார்த்தைகளைக் கேட்கமுடியாமல் காதைப் பொத்திக்கொண்டாள் பதிதனுன இவனும் தானும் ஒரேபூமியில் இருப்பது தகாதென்று நடுவில் ஒரு த்ரணத்தைப்போட்டு பந்தியை பேதித்தாள். உன்னுடைய சம்பத்தையும் உன்னையும் நான் த்ரணமாய் நினைக்கின்றேன். உன்னை என் நாதன் சிட்சிப்பதற்கு அஸ்திர சஸ்திரங்கள் வேண்டுவதில்லை. ஒருபுல்லெடுத்து உன் மீதெரிந்தாலும் நீ நாசமடைவாய். அவர் எங்கேயோ இருக்கிருரென்று நீ நினைப்பாய். தூணிலிருந்து நரசிம்மனுப் வந்தவரவரேயாதலால், இந்தப் புல்லினின்றும் உன்னைவதைக்க அவர் வெளிவரக்கூடும் என்று காண்பித்தாள். பிரம்மாதிகள் கொடுத்த வரத்தினுல் ஏதோ வாழ்கின்றுய். அனேக காரியங்கள் செய்துவிட்டேனென்று பெருமை பேசிக்கொள்கிருய். உனது அந்தர்யாமியான பரமேசுவரன் நினைத்தால் இந்தப்புல்லைக்கூட அசைக்க முடியாமல் சக்தியற்று ப்ரமிப்பாய் என்றும் தெரிவித்தாள். பரஸ்திரீகளை அதிலும் லோகமாதாவான என்னைத் தாயென்று நினைத்து பூஜிக்கவேண்டியிருக்க, பசுவைப்போல் துரெண்ணம் கொண்டாய் நீ பசுவிலும் கேடுகெட்டவனே. அதனுல் உனக்குப் புல்லே ஆகாரமாகக்கூடியது என்றும் ஞானத்தைப்போதித்தாள். சுத்தமான மந்தகாஸத்துடன் இவ்வெண்ணம் வேண்டாம். ஸ்வஸ்திரீகளிடத்தில் புத்தியைச் செலுத்தலாம். வீணுய்க் குலத்தையும் கெடுத்து உன்னையும் கெடுத்துக்கொள்ளாதே. இராஜாக்களுக்கு இது ஒழுங்கில்லை. சூரியனைவிட்டு காந்தியையும், சந்திரனைவிட்டு நிலவையும், அமிர்தத்தைவிட்டு ருசியையும் பிரிப்பதுபோல் இராமனைவிட்டுப் பிரிக்கமுடியாத வஸ்து நானென்று தெரிந்துகொள். ஆதலால் இராமனுடைய தீக்ஷணமான கோதண்டத்தின் சப்தம் காதில்படும்படி செய்துகொள்

ளாமல் என்னை அவர் பாதமூலத்தில் ஒப்புவித்து அவரைச் சரணமடைவாய். தயாநிதியான என்ராமன் உனது கொடிய குற்றங்களை மறந்து உன்னை ரட்சிப்பார் என்றாள். கஜத்துக்கும் அஜத்துக்கும், மலைக்கும் மடுவிற்கும், யானைக்கும் பூனைக்கும் எவ்வளவு வித்தியாஸமோ அவ்வளவு வித்யாஸம், என் நாதனுக்கும் உனக்கும் என்றாள். தான்யமாலினி என்னும் அவனது பத்னிகளிலொருத்தி ஆசையுடன்கூடிய நாங்களிருக்க, வெறுப்புடன் பேசும் சீதையுடன் உங்களுக்கென்ன காரியம். என்று இவனை அழைக்க, சீதே! 2 மாசங்கள் உனக்குத்தந்திருக்கிறேன். அதற்குள் நீயாக என்னிடம் வரவேணும். இல்லாவிட்டால் உன்னை நான் என்னசெய்வேனோ அதை தெய்வம்தான் அறியும். என்று சொல்லிவிட்டு வந்தவழியே திரும்பி ஸ்திரீகளுடன் சென்றான் இராவணன் போனபின் இராக்ஷஸிகள் எல்லாம் சீதையைச் சூழ்ந்துகொண்டு, பிரதாபலங்கேசுவரன் வந்து பிரார்த்திக்க என்ன நெஞ்சுதைரியம் உனக்கு அவரை வேண்டாமென்பதற்கு. இந்திராதிதேவர்களும் அவருடைய பராக்ரமத்தினால் அடங்கியொடுங்கி இருக்கிறார்கள். என்ன கர்வம் உனக்கு. நீ எங்கள் ராஜாவுக்கு விரோதமாயிருந்தால் இப்பொழுதே உன்னை கஷாயம்செய்து நாங்கள் உறிஞ்சிவிடுவோம் என்று பலவிதமும் பீடித்தார்கள். பொறுக்கமுடியாத சோகத்துடன் சீதை கிம்சுபாவிருக்ஷத்தின் ஒரு கிளையைத் தாழ்த்தி அதில் கூந்தலைமுடிந்து தன்னை இல்லாமல் செய்து கொள்ள நினைத்தாள். செந்தாமரைக் கண்ணனான தனது ராமனை உலகமெல்லாம் பார்க்க தான் பார்க்கக்கொடுத்துவைக்கவில்லையே யென்றேங்கினாள். அவரை நினைத்துநினைத்து மூர்ச்சித்தாள். எதனால் தன்னை தேடிவந்து ரக்ஷிக்கவில்லையோஎன்று கலக்கங்கொண்டாள். இவளுடைய நிலைமையைப் பார்த்து இதை ராவணனிடத்திற் சொல்லவேண்டுமென்று சில ராக்ஷஸிகள் ஓடினார்கள். மற்ற ராக்ஷஸிகள் சீதையை பயமுறுத்தினார்கள். இதுவரையில் தூங்கியிருந்த திரிசடை விழித்துக்கொண்டெழுந்து, ஏ ராக்ஷஸிகளே! இப்படி வாருங்கள். உங்களுக்கு

கேடுகாலம் சமீபித்திருக்கிறது. இந்த சீதைக்கு க்ஷேமத்தையும், நமது லங்காநகரத்துக்கு அழிவையுங்காட்டும் பயங்கரமான ஸ்வப்பனத்தைக்கண்டேன். சீதாதேவியுடன் பட்டாபிஷேகங்கொண்டு பட்டத்து யானையிலேறி பவனிவரும் ஸ்ரீராமனைப்பார்த்தேன். லட்சுமணனையும் கஜத்தின்மீது உல்லாசமாய் வருவதைப்பார்த்தேன். இதை சீதையும் சந்திரசூரியர்களை கையினால் அணைந்துகொண்டு இராமனுடன் வீற்றிருந்து தேவதைகள் எல்லாம் பூஜிக்கும்படி பெருமையுடன் இருப்பதைப் பார்த்தேன். இராவணன் முதலானவர்களை ஸ்வப்பனத்தில் கண்ட மாதிரிகளைச்சொல்லப் பிடிக்கவில்லை. கேட்டால் நீங்கள் எல்லாம் நடுக்கங்கொள்வீர்கள். விபீஷணன் ஒருவர்தான் நம்மைச்சேர்ந்தவர்களுக்குள் ஒரு மகாரதத்திலேறி கம்பீரமாய்ச் சென்றார். இந்த லங்கையை யெல்லாம் ஒரு குரங்கு சுட்டுக் கொளுத்திவிட்டது. நமக்கெல்லாம் என்ன வரப்போகிறதோ தெரியவில்லை. எல்லாருமாய் இந்த சீதாதேவியை நமஸ்கரித்து நம்மை ரக்ஷிக்கும்படி வேண்டிக்கொள்வோம் இதுவே உபாயம் வேறு வழியில்லை என்றாள். நல்ல நிமித்தங்களைப் பார்த்து தன்னையறியாமலே மனதில் களிப்புப்பிறக்க தேவி துக்கத்தை மறந்து ஸ்ரீராமனைத் தியானித்து நின்றாள்.

(இன்னும் வரும்)

கே. கல்யாணராம சாஸ்திரி.

மதிப்புரை.

"அகஸ்தியன்":— இதில் நமது விஷயமான வியாஸங்கள் அனேகம் வெளிவருவதுடன் வைத்யசம்பந்தமாகவும் சுகாதாரசம்பந்தமாகவும் மனிதர் வாழ்க்கைக்கு அவசியம் உபயோகமுள்ளதாக பல விஷயங்கள் எழுதப்படுகின்றன.

வருஷசந்தா ரூ, 3 0 0. 'அகஸ்தியன்' கோட்டாரக்கரை. S.I.R.

"தெய்வபக்தன்":— இதன் பெயருக்கேற்ப இது தேவஸ்தானங்கள் முதலிய தர்மஸ்தாபனங்களில் பொதுவாய்த் தற்காலம் இருந்துவரும் சீர்கேடுகளையகற்ற வழிதேடும் ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை. இத்தகைய பத்திரிகை இக்காலத்திற்கு வெகு அவசியமென்பதை நாம் இங்கு கூறவேண்டுவதில்லை. தவிற நமது நாடு முழுவதும் ஒவ்வோர் கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் ஏற்பட்டு அதனால் எளியவர் தங்கள் கஷ்டங்களை சுலபமாய்த் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்பதும் இதன் மற்றோர் நோக்கமாகும். மற்றும், தேசமுன்னேற்றத்திற்காக பலதுறைகளிலும் பாடுபடும் இப்பத்திரிகையை தமிழ் மக்கள் யாவரும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

'மானேஜர்'

[வருஷசந்தா ரூ 3—0—0 'தெய்வபக்தன்' கும்பகோணம்.]

"குமரன்":— இது காரைக்குடியிலிருந்து வெளிவரும் ஒரு சிறந்த மாதத்தமிழ்ப் பத்திரிகை. இதில், மதம், பாஷை, கைத்தொழில், வியாபாரம், சரித்திர ஆராய்ச்சி முதலிய விஷயங்கள் பெரிய அறிவாளர்களால் எழுதப்படுகிறது. இது சிறந்த விஷயங்களையும், குறைந்த சந்தாவையும் பெற்றிருப்பதால் பல எளியவர் கைகளிலும் இது போய்ச்சேருமென்று எதிர்பார்க்கிறோம்.

'மானேஜர்'

[வருஷசந்தா ரூ 3—0—0. 'குமரன்' காரைக்குடி.]

"பேராசிரியன்":—இதில் ஆரம்பப்பாடசாலை உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் உபயோகமாயுள்ள பல விஷயங்கள் வெளிவருகின்றன. மாணவர்கள் உலக ஞானத்தைப் பெறுவதற்கு இம்மாதாந்தப்பத்திரிகை அனுகுணமாயிருக்குமென்று நம்புகிறோம்.

வருஷசந்தா ரூ 2. 'போராசிரியன்' முத்யாலுப்பேட்டை, சென்னை

"ஆனந்தபோதினி":— வழக்கம்போல் இம்மாதப்பத்திரிகையில் அநேக விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன.

வருஷசந்தா ரூ. 1 0 0. 'ஆனந்தபோதினி' சென்னை.

காரைக்குடி சிவனடியார் திருக்கூட்டத்திலிருந்து ஜீவ ஹிம்ஸா நிவர்த்திஸம்பந்தமான துண்டுபிரசுரங்களை வரப்பெற்ரும். இதுவிஷயமாய் எமது அபிப்பிராயத்தை மற்ருேரிடத்தில் வெளியிட்டிருக்கிருேம்.

"ஸ்ரீவைகானஸன்":— என்ற ஓர் மதபோதகமான மாத ஸஞ்சிகை பிரதி திருவோணநக்ஷத்திரத்திலும் பிரசுரிக்கப்படுகிறது. இதில் மதத்தையொட்டிய அரிபவிஷயங்களும், இடையிடையே பொது சமாசாரங்களும், நாவல்களும் வெளிவரும். இதனை விருபபுமவோர் அடியில்கண்ட விலாஸத்துக்கு எழுதிப் பெறலாம். வருஷசந்தா ரூ. 3 0 0.

மானேஜர், ஸ்ரீவைகானஸன் ஆபீஸ்,
பன்னிமடை, வெள்ளக்கணர் போஸ்டு,
கோயமுத்தூர் ஜில்லா.

தவிற, தஞ்சை, "ஸமரஸபோதினி" (வாரம் இருமுறை) வாரப்பத்திரிகைகளான மதுரை, 'தக்ஷிணமித்திரன்' திருச்சி 'வாரவர்த்தமானி', திருச்சி 'பணம்', சென்னை 'விச்வகர்மன்' இவைகளையும் வரப்பெற்ருேம்.

தர்மம்.

(அ0-வது பக்கத்தொடர்ச்சி.)

இதன் ஆதியிலுள்ள வரலாற்றைச் சொல்கிறேன்.

आथातो हिमशैलाग्रे देवदारुवनालये ।
व्यासमेकाग्रमासीनमपृच्छन् ऋषयः पुरा ॥

मानुषाणां हितं धर्मं वर्तमाने कलौ युगे ।
शौचाचारं यथावच्च वद सत्यवतीसुत ॥

பிறகு ஹிமவத்பர்வதத்தின் சிகரத்தில் தேவதாரு வனத்தில் ஏகாக்கிரமாய் தபஸில் வீற்றிருக்கும் வியாஸரை ரிஷிகள் முன் சமயத்தில் அடைந்து நடந்துவரும் கலியுகத்தில் மனிதர்களுக்கு ஹிதமான தர்மத்தையும் சௌசம் ஆசாரத்தையும் கிரமப்படி ஓ ஸத்தியவதியின் புத்திரரே! சொல்லியருளும் என்று கேட்டார்கள். இதுதான் பராசரஸ்மிருதியின் முதலாரம்பம். இதில் கலியுகத்திற்காகச் சொல்லவேண்டுமென்று அவர்களே நம்மால் தூண்டப்படாமலே கேட்டிருக்கிறார்கள். அதற்கு வியாஸமுனிவர் சொன்ன பதில் என்னவென்பதை கவனிப்பாம்.

न चाहं सर्वतत्वज्ञः कथं धर्मं वदाम्यहम् ।
अस्मत्पितैव प्रष्टव्य इति व्यासः सुतोऽब्रवीत् ॥

நான் எல்லா தத்துவங்களையுமறிந்தவனில்லை. எப்படி தர்மத்தைச் சொல்வேன் என் தகப்பனே கேட்கத்தக்கவர் யென்று புத்திரரான வியாஸர் சொன்னார். இத்தகைய மகானே நான் என்னவிதமாய் தர்மத்தைச் சொல்லக்கூடும் என்று நடுங்கினார். என்முன் இருந்த தர்மத்தைக்காட்டிலும் சுருங்கச் சொல்ல வேண்டும் அதுவேசம்மதமாயும் இருக்கவேண்டுமென்று நடுங்கி என் தகப்பனாரையே கேட்டுக்கொள்ளுங்களென்று சொல்லித் தானும் அவர்களுடன் பின்சென்றார். ஆஸ்திகர்களே! இக்காலத்தில் தர்மத்தைப் பயமின்றி யாவரும் சொல்லத்தயார். இதிருக்கட்டும், இப்படி ஏன் கேட்டார்கள் என்பதைப் பின்னால் விளக்குகிறார்.

सर्वे धर्माः कृते जाताः सर्वे नष्टाः कलौ युगे ।
चातुर्वर्ण्यसमाचारं किञ्चित् साधारणं वद ॥

எல்லா தர்மங்களும் கிருதயுகத்திலுதித்தன. கலியில் அழிந்தன. ஆதல்பற்றி நான்கு வர்ணங்களும் அனுஷ்டிக்கும்படி கொஞ்சம் சாதாரணமாய்க் கூறவேண்டுமென்றூர்கள். இதையே வேறு ஸ்மிருதியில் விஸ்தரித்திருக்கிறூர்.

कृते चतुष्पात् सकलो व्याजोपाधिविवर्जितः ।
वृषः प्रतिष्ठितो धर्मो मनुष्येष्वभवत्पुरा ॥
धर्मः पादविहीनस्तु त्रिभिरंशैः प्रतिष्ठितः ।
त्रेतायां द्वापरेऽर्धेन व्यामिश्रो धर्म इष्यते ॥
त्रिपादहीनस्तिष्ये तु सत्तामात्रेण तिष्ठति ॥

கிருதயுகத்தில் தர்மமானது பூர்ணமாய் கபடம் வியாதியில்லாமல் நான்கு பாதங்களுடன் மனிதர்களிடத்தில் முன்காலத்தில் பிரகாசித்துவந்தது. பிறகு திரேதாயுகத்தில் ஒருபாதம் குறைந்து மூன்று அம்சம் தர்மம் வழங்கிற்று. துவாபரயுகத்தில் இரண்டுபாதம் தர்மம் குன்றியது. அதாவது, தர்மம் பாதி அதர்மம் பாதி யென்றுயிற்று. இக்கலியிலோவெனில் மூன்று பாதம் தர்மம் குறைந்தது. அதாவது, அதர்மம் முக்கால்பாகம் தர்மம் கால்பாகந்தான். அதுவும் 5000 வருடபரியந்தம்தானென்று பெரியோர்களின் கருத்து. அதனுல்தான் இங்கு முடிவிலும் "இருக்கிறது" என்று பெயர்மட்டிலும் இருக்கிறதென்றூர். இவ்விதம் காலவியல்பால் தர்மம் இயற்கையாய்ப் போய்விடுமென்று காட்டியதோடு நிறுத்தவில்லை.

कृतेत्वस्थिगताः प्राणास्त्रेतायां मांसमाश्रिताः ॥
द्वापरे रुधिरं चैव कलौ त्वन्नादिषु श्रिताः ॥

கிருதயுகத்திலுள்ள மனிதர்களின் பிராணன் எலும்பிலிருந்தது. பிறகு திரேதாயுகத்தில் மாமிசத்தை அடைந்தது. துவாபரத்

தில் இரத்தத்தைப் பற்றியது. கலியிலோவெனில் புசிக்கும் பதார்த்தத்தில் வந்தது என்ருர் பாருங்கள். ஆதல்பற்றித் தான் கிருதயுகத்தில் அனேக ஆயிரம் வருடங்களும் திரேதையில் மாமிசம் வாடுகிறபரியந்தம் உயிரிருக்குமானதாலும் துவாபரத்தில் இரத்தம் வற்றுகிறபரியந்தமும் கலியில் விடியற்காலம் காபி இல்லையென்ருல் யஜமானனுக்குத் தலைவலியும் பிராணஹானியும் நேருகிறது பிரத்யக்ஷம். இதை நமது மகரிஷிகள் முன்னமேயே எழுதிவிட்டார்கள். ஆதல்பற்றி அந்தந்த யுகத்திற்குத்தக்கபடி மனோதைரியமும் தபஸ் சக்தியும் ஏற்படுமென்பதும் நியாயம்தான். ஆகையால்தான்

युगे युगे च ये धर्मास्तत्र तत्र च ये द्विजाः ।
तेषां निन्दा न कर्तव्या युगरूपा हि ते द्विजाः ॥

ஒவ்வொரு யுகத்திற்கும் எவ்விதம் தர்மங்களோ ஆங்காங்கு எந்த பிராமணர்களோ அவர்களை நிந்திக்கக்கூடாது. ஏனெனில் அத்தகைய பிராமணர்கள் யுகரூபமாய் அவதரிக்கிருர்கள் என்ருர். இதனுலும் ஒவ்வொரு யுகத்திலும் தர்மம் மனிதர்களுக்குத் தக்கபடிதான் என்று அவர்களே சிபார்சு செய்கிருர்கள். இதை அனுசரித்தே,

अन्ये कृतयुगे धर्मास्त्रेतायां द्वापरे तथा ।
अन्ये कलियुगे नृणां युगरूपानुसारतः ॥

கிருதயுகத்தின் தர்மம் வேறு, த்ரேதாயுகத்திற்கும் தர்மம் வேறு, த்வாபரயுகத்திற்கும் வேறுதான், கலியுகத்திற்கும் வேறு என்ருர்.

(இன்னும் வரும்.)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரீ.